1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கையில் விடை இருக்கிறது. எவ்வளவு நிலம் சாகுபடியாளர்கள் கையில் இருக்கிறது, எவ்வளவு நிலங்கள் சாகுபடி செய்து வருகிறார்கள் என்ற விவரம் எல்லாம் விவர அறிக்கையில் இருக்கிறது.

Crop Insurance Scheme.

* 318 Q.—Thiru K. KANDASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal to introduce Crop Insurance Scheme in this State; and

(b) if so, the present stage thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்ட இந்திய அரசின் மாதிரி மசோதா பரிசீலனையில் உள்ளது. 1970 ஆம் ஆண்டு, பயிர்க் காப்புறுதியைக் கொண்டுவரும் வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இரண்டு ஆண்டுகால அளவுக்கு ஒப்பளிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் 1972 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. அம்முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் கிடைத்த பின்னர், இவ்விஷயத்தில் மாநில அரசின் கருத்துக்கள், மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

திரு. கே. கந்தசாமி : மத்திய அரசு அனுப்பி வைத்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் இன்னும் மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவில் பரிசீலித்து உடனடியாக அமல் படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கு என்று திட்டம் வகுக்கப்பட்டு ஒரு நாள் குறிக்கப்பட்டு அந்த நாளைப் பற்றியும் சொன்னேன். இரண்டு ஆண்டுகளுக்கு என்று திட்டத்தை வைத்து டிசம்பர் மாதத்தில் முடிக்க இருக்கிறார்கள். அது முடிந்த பிறகுதான் அதனுடைய ஆராய்ச்சி முடியும்.